IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No.26/2021
Deposition of witness for PW1

Name : மதியழகன்

Father Name : பாண்டுரங்கன்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 08th day of November, 2023.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. வழக்குரையில் 6, 7 வது பத்தியில் வா.சா.ஆ.6—ஐ என்னுடைய ஆளுமையில் அடிப்படையின் நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவு மற்றும் சர்வேயரின் உதவியுடன் பெறப்பட்ட ஆவணம் என்று கூறியுள்ளப்படியால் வா.சா.ஆ.6—க்கு எந்த ஒரு சட்டப்படியான செல்லுந்தன்மை இல்லை என்று சொன்னால் என்றால் சரியல்ல. நான் கூறுவது பொய் என்றும் அந்த வா.சா.ஆ.6—ஐ பொருத்தமட்டில் வழக்குரையில் பத்தி 6, 7—யில் உள்ள நான் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் உண்மை என்று சொன்னால் விசாரணை அடிப்படையில்தான் வா.சா.ஆ.6 வழங்கப்பட்டது.

2. நான் வழக்கு சொத்தை 2003 ம் ஆண்டில் கிரையம் பெறுவதற்கு முன்பே 4 ம் பிரதிவாதியின் கணவர் வழக்கு சொத்தில் கிணறு, பம்பு செட்டில் உள்ள அவரது பாகத்தை அவர் கிரையம் வாங்கியிருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. கிணறு பம்பு செட்டில் எனக்கு நான்கில் ஒரு பாகம் தான் உரிமையுள்ளது என்றால் சரிதான். மீதமுள்ள 3 பாக உரிமையாளர்களின் பெயர்கள் 1.தாமோதரன், 2.அம்பிகாபதி, 3.பொன்னுரங்கம்.

3. தற்போது என்னிடம் காட்டப்படும் 29.07.1999 ம் தேதியில் 4 ம் பிரதவாதியின் கணவர் கருணாநிதி என்பவர் குப்பம்மாள் வகையரா இடமிருந்து வழக்கு சொத்தில் கிணற்றிலுள்ள பாகம் உள்பட மற்ற சொத்துக்களையும் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்று கூறுகிறார். மேற்படி தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திர எண்.508/2001—ல் சார்பதிவக சான்றிட்ட நகல். பி.வா.சா.ஆ.1 ஆகும். (வாதி தரப்பு வழக்கறிஞர் மேற்படி ஆவணத்தை தரப்பினரை வைத்து குறியீடு

செய்யாமல் வாதியை வைத்து குறியீடு செய்வதால் ஆட்சேபனை தெரிவித்ததை உரிமையியல் விசாரணை சட்டம் கட்டளை 13 விதிகளின் படி இந்நீதிமன்ற நிராகரிக்கிறது.)

4. 4ம் பிரதிவாதியின் கணவர் கருணாநிதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் 4ம் பிரதிவாதிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். அவ்வாறு இருக்க வழக்குரையில் 5ம் பத்தியில் 4ம் பிரதிவாதியை இறந்து போன சுந்தர் என்பவரின் மகள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் அவ்வாறு குறிப்பிடவில்லை. அவ்வாறு குறிப்பிட்டுயிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

5. நான் வழக்கு சொத்தில் வா.சா.ஆ.2–ன் அடிப்படையில் தான் வழக்கு சொத்தில் நான் உரிமை கோருகிறேன் என்றும் வேறு எந்த ஆவணங்களின் அடிப்படையிலும் நான் உரிமை கோரவில்லை என்றும் சொன்னால் சரிதான். எனக்கு பொது சொத்து கிணற்றில் எனக்கு எந்த அளவுக்கு உரிமை உள்ளதோ அதேபோல் மற்ற பாகஸ்தர்களுக்கும் உரிமை உள்ளது என்றால் சரிதான். மற்ற பாகஸ்தர்கள் அவர்களின் உரிமையை அவர்கள் அனுபவிப்பதை கேள்வி கேட்க எனக்கு எந்த அதிகாரம் கிடையாது என்றால் சரிதான்.

6. வழக்குரையில் பாகஸ்தர்கள் யார்யார் என்று நான் குறிப்பிடாததற்கு காரணமே அவ்வாறு நான் குறிப்பிட்டுருந்தால் 1ம் பிரதிவாதியும் அவரது வாரிசுகளும் தான் கூட்டு பாகஸ்தர்கள் என்ற விவரம் தெரிந்துவிடும் என்பதால்தான் மறைத்துள்ளேன் என்றால் அது சரியல்ல. வா.சா.ஆ.3 பட்டாவில் பாசன விவரம் என்ற அட்டவணையில் கிணறு என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. வா.சா.ஆ.1, 2 ஆகியவைகள் குறைபாடுடைய ஆவணங்கள் என்பதால்தான் வா.சா.ஆ.3 பட்டாவில் கிணறு பற்றி குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. கிணறு பாகம் கூட்டு பட்டா எண் குறிப்பிடப்பட்டுள்ளது.

7. வா.சா.ஆ.5–ல் என் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கிணறு பாகம் கூட்டு பட்டா எண்ணில் என் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதற்கு வா.சா.ஆ.3, 4, 5 ஆகியவற்றில் எங்கேயுமே குறிப்பிடப்படவில்லை என்றால் சாட்சி ஆவணத்தை வா.சா.ஆ.3 முதல் 5 பார்த்துவிட்டு சரிதான் என்று கூறுகிறார். வா.சா.ஆ.3

2003–ல் நான் பெற்றபோதே கிணறு பற்றிய விவரம் இல்லை என்பது எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது. இன்றைய தேதிவரை வா.சா.ஆ.3–ல் கிணறு பாகத்தை சேர்க்க நான் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் கூட்டு பட்டா என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் நான் நடவடிக்கை எடுக்கவில்லை. 4ம் பிரதிவாதிக்கு ஆதரவு இல்லாத காரணத்தினாலும் அவரிடமிருந்து அவருக்குரிய பாகத்தையும் அவரின் மற்ற சொத்துக்களையும் நான் கிரையம் கேட்டும் கொடுக்காததாலும் அவரை நிர்பந்தப்படுத்த வேண்டி அவர் மீது இவ்வழக்கை பொய்யாக போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

8. எனக்கு கிரையம் கொடுத்தவருக்கு கிரைய சொத்தில் என்ன உரிமை உள்ளது என்பதை ஆராயமல் நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கியதில் பிரச்சனை ஏதேனும் இருப்பின் எனக்கு கிரையம் கொடுத்தவர் மீதுதான் சட்டப்படி நடிவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னால் நான் தெரிந்தேதான் சொத்தை அளந்து தான் சொத்தை வாங்கினேன். வா.சா.ஆ1, 2 ஆகியவைகள் சரியான ஆவணங்கள் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 –ல் கண்டுள்ள சொத்தின் விவரத்தினை வழக்குரை சொத்து விவரத்தில் மாற்றி குறிப்பிட்டுள்ளேன் என்னால் சரியல்ல.

9. வா.சா.ஆ.2 தவறான ஆவணம் என்பதால் அதன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள வருவாய் ஆவணங்களும் தவறானவை என்றும் எனவே, அதன் அடிப்படையில் வழக்கு சொத்தில் நான் உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கு வழக்கு மூலமே இல்லை என்றும் 4ம் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>: இல்லை

K VENKATESAN Digitally signed by K VENKATESAN

DISTRICT MUNSIF

KATPADI